# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | :CC No.43/2026 | Date | : 05.03.2026 |
| Deposition of Witness for | :அ.சா.1 | Taluk | : |
| Name | :திரு.மாதேஸ்வரன் | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026.
(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், தேவூர் காவல் நிலையத்தில் இரண்டாம்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2025ம் தேதி, மாலை சுமார் 05.00 மணிக்கு சங்ககிரி காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் என்பவருடன் நானும், SSI திரு.சண்முககுமார் ஆகியோரும் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, வட்ராம்பாளையம், காவேரிபட்டி பிரிவுரோடு அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் மஞ்சள் பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் அண்ணாமலை, த/பெ.அய்யாங்குட்டி, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் என்று கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி, உரிமமின்றி அரசு மதுபாட்டில்களை வாங்கிவந்து அதிக விலைக்கு

விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 05.15 மணிக்கு கைது செய்தும், அவர் ஆஜர் செய்த சுமார் 180ml அளவுகொண்ட Black Pearl Brandy - 06 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், SSI திரு.சண்முககுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், கைது செய்த எதிரியை தடயங்களுடன் மாலை சுமார் 06.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து காவல் உதவி ஆய்வாளர், எதிரியின் மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.156/2025, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1) காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை சுமார் 05.00 மணிக்கு சென்றோம். யார் யார் சென்றோம் என்றால் நானும், SSI திரு.சண்முககுமார் மற்றும் காவ்ல உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் ஆகியோர் சென்றோம். என்னென்ன வாகனத்தில் சென்றோம்

என்றால் நானும், SSI திரு.சண்முககுமாரும் ஒரு இருசக்கர வாகனத்திலும், காவல் உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். எந்தெந்த ஊரின் வழியாக சென்றோம் என்றால் மயிலம்பட்டி, வட்ராம்பாளையம் வழியாக சென்றோம்.

2) எதிரி எந்த பையில் மதுபாட்டில் வைத்திருந்தார் என்றால் துணி பையில் வைத்திருந்தார். மேற்படி, துணி பையை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபானம் வேறு நபர்களுக்கு விற்பனை செய்ததற்கான பணத்தை எதிரியிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை. பொதுமக்கள் யாரேனும் எதிரி மதுபாட்டில் விற்பனை செய்ததாக புகார் அளித்துள்ளார்களா என்றால் இல்லை.

3) நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பெற்று அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Matheshwaran

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC.43/2026 | Date | : 05.03.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **திரு.அருண்குமார்** | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026.

<u>(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2025 ம் தேதி, மாலை சுமார் 05.00 மணிக்கு நானும், SSI திரு.சண்முககுமார் மற்றும் இரண்டாம்நிலை காவலர் திரு.மாதேஸ்வரன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, வட்ராம்பாளையம், காவேரிபட்டி பிரிவுரோடு அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் மஞ்சள் பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் அண்ணாமலை, த/பெ.அய்யாங்குட்டி, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் என்று கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி, உரிமமின்றி அரசு மதுபாட்டில்களை வாங்கிவந்து அதிக விலைக்கு

விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 05.15 மணிக்கு கைது செய்தும், அவர் ஆஜர் செய்த சுமார் 180ml அளவுகொண்ட Black Pearl Brandy - 06 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த SSI திரு.சண்முககுமார் மற்றும் இரண்டாம்நிலை காவலர் திரு.மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் SSI திரு.சண்முககுமார் மற்றும் இரண்டாம்நிலை காவலர் திரு.மாதேஸ்வரன் சாட்சி கையொப்பம் பெற்றேன். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

4) பின்னர், கைது செய்த எதிரியை தடயங்களுடன் மாலை சுமார் 06.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.156/2025, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

3) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்-95 ன் மூலம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.விஜயராகவன், அவர்கள் அனுப்பி வைத்துள்ளார். **(படிவம்-95 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர், எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை -

1) காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை சுமார் 05.00 மணிக்கு சென்றோம். யார் யார் சென்றோம் என்றால் நானும், SSI திரு.சண்முககுமார் மற்றும் இரண்டாம்நிலை காவலர் திரு.மாதேஸ்வரன் ஆகியோர் சென்றோம். என்னென்ன வாகனத்தில் சென்றோம் என்றால் நான் ஒரு இருசக்கர வாகனத்திலும், SSI திரு.சண்முககுமார் மற்றும் இரண்டாம்நிலை காவலர் திரு.மாதேஸ்வரன், ஒரு இருசக்கர வாகனத்திலும், சென்றோம். எந்தெந்த ஊரின் வழியாக சென்றோம் என்றால் மயிலம்பட்டி, வட்ராம்பாளையம் வழியாக சென்றோம்.

2) எதிரி எந்த பையில் மதுபாட்டில் வைத்திருந்தார் என்றால் துணி பையில் வைத்திருந்தார். மேற்படி, துணி பையை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி மதுபானம் வேறு நபர்களுக்கு விற்பனை செய்ததற்கான பணத்தை எதிரியிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை. பொதுமக்கள் யாரேனும் எதிரி மதுபாட்டில் விற்பனை செய்ததாக புகார் அளித்துள்ளார்களா என்றால் இல்லை.

3) நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பெற்று, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Arunkumar

Judicial Magistrate No.1,

Sankari.